

திருவண்ணாமலை மாநகரில், தூய்மை அருணை அமைப்பின் சார்பில் நடைபெற்று வரும் பணிகளை முன்னாள் பொதுப்பணித்துறை அமைச்சரும், தூய்மை அருணை அமைப்பாளருமான எ.வ.வேலு பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் மேற்பார்வையாளர்கள் இரா.ஸ்ரீதரன், ப.கார்த்திவேல்மாறன், பிரியா விஜயரங்கன் உட்பட பலர் உள்ளனர்.

## திருச்சுழி சட்டமன்றத் தொகுதி

# ஒன்றிய - பேரூரில் நன்றி அறிவிப்பு கூட்டங்கள்!

### மாவட்டச் செயலாளர் தங்கம் தென்னரசு எம்.எல்.ஏ.அறிவிப்பு!

விருதுநகர்,மே.18 -

விருதுநகர் வடக்கு மாவட்டச் செயலாளரும்,திருச்சுழி சட்டமன்ற உறுப்பினருமான தங்கம் தென்னரசு விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

திருச்சுழி சட்டமன்றத் தொகுதியில் ஒன்றியம்பேரூர் வாரியாக நன்றி அறிவிப்பு கூட்டங்கள் விவரம் வருமாறு:

நாளை (19.05.2026 - செவ்வாய்) மாலை 5.00 மணி, அ.முக்குளம் , நரிக்குடி வடக்கு, மாலை 5.30 மணி, நரிக்குடி , நரிக்குடி தெற்கு, மாலை 6.15 மணி, வீரசோழன், நரிக்குடி வடக்கு, இரவு 7.00 மணி, ஆனைக்குளம், நரிக்குடி தெற்கு. 20.5.2026 புதன் மாலை 5.00 மணி, மேலையூர், திருச்சுழி தெற்கு. மாலை 5.30 மணி, ம.ரெட்டியாபட்டி, ஒத்த கடை, திருச்சுழி தெற்கு, மாலை 6.15 மணி, கல்லூரணி, திருச்சுழி வடக்கு, இரவு 7.00 மணி, திருச்சுழி,



திருச்சுழி வடக்கு , 21.5.2026 அன்று மாலை 5.00 மணி, முடுக்கன்குளம், காரியாபட்டி கிழக்கு, மாலை 5.30 மணி, காரியாபட்டி, காரியாபட்டி பேரூர், மாலை 6.15 மணி, கல்குறிச்சி

காரியாபட்டி மேற்கு, இரவு 7.00 மணி, மல்லாங்கிணர், மல்லாங்கிணர் பேரூரில் நன்றி அறிவிப்பு கூட்டங்கள் நடைபெறுகின்றன.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு எம்.எல்.ஏ.அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## சேலம் கிழக்கு மாவட்டத்தில்

# சட்டமன்ற தேர்தல் முடிவுகள் குறித்து கள ஆய்வுக்குழு வருகை!

### மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி. அறிக்கை!

சேலம், மே. 18-

சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர். சிவலிங்கம் எம்.பி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கழகத் தலைவர் தளபதியார் அவர்கள் தலைமையில் 14052026 அன்று சென்னை அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கில் நடைபெற்ற "தி.மு.க மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில்" அறிவித்ததற்கிணங்க, நடந்து முடிந்த சட்டமன்ற தேர்தல் முடிவுகள் குறித்து "கள ஆய்வு" குழு திருமிகு. வழக்கறிஞர் ஏ.சரவணன், மற்றும் திருமிகு.நா.இளையராஜா ஆகியோர் சேலம் கிழக்கு மாவட்டத்தில் தொகுதிவாரியாக சுற்றுப்



பயணம் மேற்கொண்டு மாவட்ட செயலாளர், வேட்பா ளர்கள், தொகுதி பார்வை யாளர்கள், தொகுதிக்குட்பட்ட செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய பேரூர் கழகச் செயலாளர்கள், தேர்தல் பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள், கிளைக் கழக, வார்டு கழக செயலாளர்கள், உள்ளிட்ட அனைத்து நிர்வாகிகளையும் நேரடி யாக சந்தித்து கருத்துக்களையும், அவர்களின் பரிந்துரைகளையும் காலை முதல் மதியத்திற்குள் பெற்று இந்த சந்திப்பின்னை நிறைவு செய்தவிட்டு மதியத்திற்கு மேல் சார்பு அணிகளை சேர்ந்த மாநில மாவட்ட நிர்வாகிகளை தனித்தனி குழுக்களாக சந்திக்க பின்வரும் பட்டியல்படி வருகை தர உள்ளனர், அது சமயம் தொகுதிக்குட்பட்ட அனைத்து நிர்வாகிகளும் தவறாமல் கலந்து கொண்டு கருத்துக்களை தெரிவிக்க வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

ஏற்காடு -18.05.2026 பிற்பகல் 03.00மணி - சேலம் கிழக்கு மாவட்ட கழக அலுவலகம் தளபதி. மு.க.ஸ்டாலின் அறிவாலயம், வாழப்பாடி

கெங்கவல்லி - 19.05.2026 காலை 10.00 மணி - சக்தி ரெசிடென்சி தலைவாசல்

வீரபாண்டி- 20.05.2026 காலை 10.00 மணி - மெட்ராஸ் மெஸ் திவ்யம் தியேட்டர் அருகில், கொண்டலாம்பட்டி

ஆத்தூர் - 21.05.2026 காலை 10.00 மணி- ஆத்தூர் A2B ஹோட்டல்

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## மாவட்டப் பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் தலைமையில்

# நெல்லை கிழக்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம்!

நெல்லை, மே 18 -

கழகத் தலைவர் தளபதியார் அவர்களின் ஆணைக்கிணங்க நெல்லை கிழக்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம் (16.05.2026 சனிக்கிழமை) அன்று காலை 10 மணிக்கு வள்ளியூர் மாவட்டக் கழக அலுவலகத்தில் நெல்லை கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் தலைமையில் நடைபெற்றது.

தொடர்ந்து அவர் பல்வேறு ஆலோசனைகளை வழங்கி உரையாற்றினார்.

இந்நிகழ்வில் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் சா.ஞானதிரவியம், எஸ்.ஏ.கே.சித்திக், பொறுப்புக்குழு உறுப்பினர்கள் ஜார்ஜ் கோசல், நம்பி, அல்போன்ஸ், ஆதி பாண்டி, ஹரிகிருஷ்ணன், அனுராதா, சந்திரகலா, பொதுக்குழு உறுப்பினர்கள் பரம சிவ ஐயப்பன், கனகராஜ், சாந்தி சுபாஷ், ஒன்றிய செயலாளர்கள் போர்வெல் கணேசன், பி.சி. ராஜன், செல்வ கருணாநிதி, சுடலைக்கண்ணு,

எரிக் சூடு, சுபாஷ் தங்க பாண்டியன், நகர செயலாளர் மணி சூரியன், பேரூர் செயலாளர்கள் அயூப்கான், தமிழ்வாணன், வானுமாமலை, முருகையா பாண்டியன், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் பாலசந்தர், மல்லிகா அருள், மாடசாமி, பொட்டைகுளம் முருகன், முருகன், கேசவன், திருப்பதி ஜெயசீலன், அழகுமுத்து, சேகர், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் மனோஜ், தில்லை ராஜா, அருள்ராஜ் டார்வின் உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



தேனி தெற்கு மாவட்ட கழகக் கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் மனோகரன் தலைமையில் கம்பம் கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது மகாராஜன் எம்.எல்.ஏ. முன்னிலை வகித்தார். தெற்கு மாவட்டச் செயலாளர் கம்பம் நா. இராமகிருஷ்ணன் உரையாற்றினார். மாநில கொள்கை பரப்பு துணை செயலாளர் பாண்டியன். தெற்கு மாவட்ட துணை செயலாளர்கள் வேப்பம்பட்டி செந்தில்.. மலைச்சாமி. ஈஸ்வரி பிச்சை. மாநில சீர் மரபினர் நல வாரிய உறுப்பினர் சூர்யா ப. தங்கராஜ் மாநில பொதுக்குழு உறுப்பினர் தக்காளி ஹக்கீம் மாநில செயற்குழு உறுப்பினர் குரு குமரன். . தெற்கு மாவட்ட இளைஞரணி மாவட்ட அமைப்பாளர் செஞ்சுரி செல்வம் .. ஒன்றிய செயலாளர்கள் தங்கப்பாண்டி சுப்பிரமணி. தங்கப்பாண்டி முருகேசன் அண்ணாதுரை. ,நகர செயலாளர்கள் வீரபாண்டியன் பால்பாண்டி. ராஜா .லோகன் துறை , பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்



சிவகங்கை மாவட்டம் காரைக்குடி யில் நடைபெற்ற மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் மாவட்டக் கழக செயலாளர் கே ஆர்.பெரிய கருப்பன் சிறப்புரையாற்றினார். உடன் முன்னாள் அமைச்சர் கள் மு.தென்னவன் திருமதி தமிழரசி ரவிக்குமார், மாநில கழக செய்தி தொடர்புக்குழு துணைத் தலைவர் மருதுஅழகுராஜ், காரைக்குடி சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர் நல்ல சேதுபதி, மாவட்ட அவை தலைவர் வழக்கறிஞர் அ.கணேசன், மாவட்ட கழக துணைச் செயலாளர் த.சேங்கைமாறன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

## திருவண்ணாமலை மாநகரம்

# தூய்மை அருணை பணிகளை முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு!

### மரக்கன்றுகள் பராமரித்தலை தீவிரப்படுத்த ஆலோசனை!

திருவண்ணாமலை, மே 18 -

திருவண்ணாமலையில் வாரந்தோறும் நடைபெறும் தூய்மை அருணை பணிகளை முன்னாள் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மரக்கன்றுகளை பராமரித்தலை தீவிரப்படுத்த ஆலோசனை வழங்கினார்.

திருவண்ணாமலையில் தொண்டு செய்வோம், துணை நிற்போம் என்ற முழக்கத்தோடு கடந்த 7 ஆண்டுகளாக முன்னாள் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்களை அமைப்பாளராகக் கொண்டு, தூய்மை அருணை திட்டம் செயல்பட்டு வருகிறது. தூய்மை அருணை திட்டத்திற்கு 4 மேற்பார்வையாளர்களும், 39 வார்டுக்கு 39 ஒருங்கிணைப்பாளர்களும், மாடவீதி தூய்மைப் பணிக்கு 7 ஒருங்கிணைப்பாளர்களும் ஒவ்வொரு வார்டுக்கும் 25 தூய்மைக் காவலர்கள் என ஆயிரக் கணக்காணோர் மரம் நடுதல், பராமரித்தல், கால்வாய் மற்றும் தூர்வாருதல் என செயல்பட்டு வருகின்றனர்.

கிரிவலப்பாதையில் உள்ள 20 குளங்களை தூய்மை அருணை அமைப்பு மற்றும் மாவட்ட நிர்வாகம் சார்பில் சீரமைப்பது என தீர்மானிக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகிறது.

இதனைத் தொடர்ந்து, தூய்மை அருணை அமைப்பும், அருணை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையும் இணைந்து, கர்ப்பிணி தாய்மார்களுக்கு வளைகாப்பு நிகழ்ச்சி மாதந்தோறும் நடத்துவதென தீர்மானிக்கப்பட்டு, முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் ஜூலை 16 அன்று தொடங்கி வைத்தார்கள். இது மாதந்தோறும் நடைபெற்று வருகிறது.

17.05.2026 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 7.00மணிக்கு, திருவண்ணாமலை மாநகரில் நடைபெறும் தூய்மைப் பணிகள், நடப்பட்ட மரக்கன்றுகளை பராமரிக்கும் பணி ஆகியவற்றை முன்னாள் பொதுப்பணித் துறை அமைச்சரும், தூய்மை அருணையின் அமைப்பாளருமான எ.வ.வேலு அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

காலை 7.00மணிக்கு வார்டு எண்32, மற்றும் வார்டு27 தேனிமலை சுற்றியுள்ளப் பகுதிகளில் மண்மேடுகள், கால்வாய் அடைப்பு, மரக்கன்றுகள் பராமரிப்பதை பார்வையிட்டு, முன்னாள் பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் பார்வையிட்டு ஆலோசனைகளை வழங்கினார்.

காலை 7.30மணிக்கு, வார்டு எண்.30 கோரிமேட்டுத் தெருவில் உள்ள நடைபெற்று வரும் கால்வாய் அடைப்பு,

காலை 7.45மணிக்கு, வார்டு எண்.31 மற்றும் வார்டு.33 அண்ணா நகர் பகுதியில் செடிகள் நிரம்பிய புதர்கள் மற்றும் கால்வாய் தூர்வரும் பணியினை பார்வையிட்டும்,

காலை 8.00மணிக்கு, வார்டு எண்.36 கல் நகரில் நடைபெறும் கால்வாய் அடைப்பு தூய்மைப் பணிகள்,

காலை 8.15மணிக்கு, வார்டு எண்.37, கோபால் தெருவில் நடைபெறும் கால்வாய் சுத்தப்படுத்துதல், மரம் நடுதல்,

காலை 8.30மணிக்கு, வார்டு எண்.38, ஆடுதொட்டித் தெருவில் நடைபெறும் வரும் தூய்மை பணி மற்றும் கால்வாய் தூர்வாரும் பணியினை பார்யிட்டு ஆய்வு செய்தார்.

காலை 8.45மணிக்கு, வார்டு எண்.39, வேல் நகரில் நடைபெறும் தூய்மை அருணை பணி மற்றும் மரக்கன்றுகள் பராமரித்தலை ஆய்வு செய்தார்.

ஒவ்வொரு வார்டிலும் ஆய்வு செய்த முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு அங்கு தூய்மை பணியில் ஈடுபடும் மாணவர்கள் மற்றும் பெண்களிடம் நலம் விசாரித்து, அவர்களை ஊக்கப்படுத்தினார் .

தூய்மைப் பணியில் தூய்மை அருணையின் மேற்பார்வையாளர்கள் இரா.ஸ்ரீதரன், ப.கார்த்திவேல்மாறன், ப்ரியா ப.விஜயரங்கன், இல.குண சேகரன், ஒருங்கிணைப்பாளர்கள் அ.கோவிந்தன், செ.எழில்மாறன், ஏ.ஏ.ஆறுமுகம், ம.வினோத்குமார், எஸ்.கே.டி.வீரா, வழக்கறிஞர்கள் ம.செந்தில், கிருஷ்ணமூர்த்தி, பா.அரி கிருஷ்ணன், வழக்கறிஞர் ந. சீனுவாசன், இரா.அருண், மெட்ராஸ்கே.சுப்பிரமணி, காலேஜ் கு.ரவி, கே.காளிதாஸ், குட்டி க.புகழேந்தி, சி.சண்முகம், பி.ஆர்.நாகராஜ், கு.குமார், மண்டி.பிரகாஷ், மு.கருணாமூர்த்தி, இரா.ராஜாமணி, அ.திவாகர், அ.பழனி, கே.பிரகாஷ், பி.ஜி.முருகன், கோபி.சங்கர், சென்னை.சுரேஷ், முபாரக், லயன்.ஷெரீப். கா.ஏழுமலை, எஸ்.ஜாகீர், இரா.ஜோதி, கு.தியாகு, மூ.காமேஷ், ஹக்கிம்சேட், சி.கே.சசிக்குமார், கோல்டு. எஸ்.பிரபு மற்றும் மாடவீதி ஒருங்கிணைப்பாளர்கள் இல.குணசேகரன், சினம்.பெருமாள், ஆர். கே.பி.பாஸ்கர், ஜீவரேகா விஜயராஜ், அருணை. வெங்கட் உட்பட ஆயிரக் கணக்கான தூய்மைக் காவலர்களும் கலந்து கொண்டனர்.

# திண்டிவனம் சட்டமன்றத் தொகுதி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம்!

### விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் அறிக்கை!

செஞ்சி, மே 18 -

விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

விழுப்புரம் வடக்கு மாவட்டம் திண்டிவனம் சட்டமன்றத் தொகுதி நிர்வாகிகள்கலந்து கொள்ளும் ஆலோசனைக் கூட்டம் விழுப்புரம் வடக்கு



மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி கே. எஸ். மஸ்தான் தலைமையில் இன்று 18.05.2026 திங்கள்கிழமை மாலை 4.00மணிக்கு திண்டி வனம் ஹோட்டல் ஆரியாஸ்மினி ஹாலில் நடைபெறுகிறது.

கூட்டத்தில் திண்டிவனம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட மாநில, மாவட்ட, நிர்வாகிகள் ஒன்றிய செயலாளர்கள், அனைத்து அணி அமைப்பாளர்கள்,தேர்தல் பணி குழு நிர்வாகிகள் உள்ளிட்ட அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு கூட்டத்தினை சிறப்பிக்குமாறு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு செஞ்சி மஸ்தான் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

# கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம்!

### மாவட்ட செயலாளர் தா.உதயசூரியன் அறிக்கை!

கள்ளக்குறிச்சி,மே 18 -

கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.உதயசூரியன் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் கூறியிருப்பதாவது, மண்டல பொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு ஆலோசனைப்படி கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட திமுக சார்பில், அவசர செயற்குழு ஆலோசனை கூட்டம் இன்று (18.05.2026 - திங்கட்கிழமை) காலை 9:00 மணி அளவில் மாவட்டக் கழக அலுவலக கூட்ட அரங்கில் (ராஜா திரையரங்கம் பின்புறம்) நடைபெறுகிறது.

ஆகையால், கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாவட்ட கழக நிர்வாகிகள், தேர்தல் பார்வையாளர்கள், தேர்தல் பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக



செயலாளர்கள், அனைத்து சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், அனைவரும் சரியான நேரத்தில் தவறாமல் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பொருள்: தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் (ஜூன் 3) விழா குறித்தும், தேர்தல் கள ஆய்வு குறித்தும் மற்றும் கழக ஆக்க பணிகள் குறித்து கூட்டத்தில் ஆலோசனை நடைபெற உள்ளதாக அறிக்கையின் வாயிலாக தெரிவிக்கப்படுகிறது.



விழுப்புரம் வடக்கு மாவட்டம் மயிலம் வடக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் தீவனூரில் அமைக்கப்பட்ட நீர்மோர்பந்தலை விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான், ஆரணி பாராளுமன்ற உறுப்பினர் எம் .எஸ். தரணி வேந்தன் ஆகியோர் திறந்து வைத்து பொதுமக்களுக்கு நீர்மோர் தர்பூசணி பழங்களை வழங்கினர்.உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், ஒன்றிய பெருந்தலைவர்கள் மயிலம் யோகேஸ்வரி மணிமாறன், அமுதா ரவிக்குமார், ஒன்றிய செயலாளர் மணிமாறன் உள்ளிட்ட தி.மு.க. கழக நிர்வாகிகள் உள்ளனர்.